தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
*An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal*
*eISSN: 3049-0723*
*Vol. 2 Issue: 01 August 2025*

# இசுலாமிய சமயப் பிள்ளைத்தமிழ் நூல்களில் படைப்பாளுமை

# Creative Expression in Islamic Religious Pillai Tamil Literature

[1.] **த.தமிழ்ச்செல்வி,**

Reg. No.BDU2120632779056 பகுதி நேர முனைவர் ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, உருமு தனலட்சுமி கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகம் இணைவு பெற்றது, காட்டூர், திருச்சி-19.

**T. Tamizhselvi,**

Reg. No.BDU2120632779056, Part time PhD research scholar, Department of Tamil studies, Urumu Dhanalakshmi College, Afflicated by Bharathidasan University, Kattur,Trichy- 19

[2.] ***முனைவர் சை. ஆசிக் ஹமீது,*** *உதவி பேராசிரியர் மற்றும் நெறியாளர், தமிழாய்வுத்துறை, உருமு தனலட்சுமி கல்லூரி, காட்டூர், திருச்சி.*

**Dr. S. ASIC HAMEED**,M.A.,M.PHIL.,PH.D.,, Assistant Professor and Research Guide, Department of Tamil Studies, Urumu Dhanalakshmi College, Kattoor, Trichy.

**Abstract:**

During the Post-Sangam period, Saivism and Vaishnavism held a pre-eminent position among the religious literary traditions that emerged. Subsequently, Jain and Buddhist literatures further enriched the Tamil language. Following them, the contributions of Christians and Muslims to Tamil literature and language also deserve significant mention. However, the extent of Muslim contributions to Tamil literature is not extensively documented in the history of Tamil literature. Although Pillai Tamil literature flourished widely within the Islamic tradition, it did not gain the same popular influence as Pillai Tamil works from other religious traditions. The objective of this study is to highlight how the authors in two specific Islamic Pillai Tamil works – namely, 'Nabi Nayagam Pillai Tamil' and 'Vallal Seethakkathi Pillai Tamil' – demonstrated their unique creative artistry in their compositions, bringing it to a broader recognition.

**Keywords**: Saivism, Vaishnavism, Islamic Religious

**ஆய்வுச் சுருக்கம்**

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சமய இலக்கியங்களில் சைவம் மற்றும் வைணவம் முதலிடம் பெற்றன. பிறகு சமண மற்றும் பௌத்த இலக்கியங்கள் தமிழை வளர்த்தன. அதனைத் தொடர்ந்தே கிறித்தவர் மற்றும் இசுலாமியர் தமிழ்ப்பணியையும், தமிழ்த்தொண்டினையும் குறிப்பிடப்பட வேண்டும். ஆனால் தமிழ் இலக்கிய வரலாற்றில் இசுலாமியரின் தமிழ்த்தொண்டு விரிவாகக் குறிப்பிடப்படவில்லை. இசுலாமிய சமயத்தில் பரவலாகப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றியிருப்பினும், அவை பிற சமயப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் போல மக்களிடையே செல்வாக்கைப் பெறவில்லை. இசுலாமிய பிள்ளைத்தமிழ் நூல்களில் நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் மற்றும் வள்ளல் சீதக்காதி பிள்ளைத்தமிழ் ஆகிய இரு நூல்களில் படைப்பாளர்கள் தங்களது படைப்பில் சிறப்பான ஆளுமைத்திறனை வெளிப்படுத்திய விதத்தை உலகறியச் செய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**குறிப்புச் சொற்கள்**

இசுலாமிய சமயம், படைப்பாளுமை, பிள்ளைத்தமிழ்

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் தொன்மையும், மேன்மையும் பெற்று உலகில் தனிச்சிறப்புடன் திகழ்கின்றன. தமிழ்மொழியின் சிறப்பினை மேலெடுத்துச் சென்ற இலக்கியவகைகளுள் முதன்மையானது தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான பிள்ளைத்தமிழ் இலக்கியமே ஆகும். சிற்றிலக்கியங்கள் பலவற்றுள்ளும் சிறந்ததெனப் போற்றப்படுவது பிள்ளைத்தமிழாகும். கடவுள் அல்லது மனிதர்களுள் சிறந்தவரைக் குழந்தையாகப் பாவித்துப் போற்றிப் பாடுவது பிள்ளைத்தமிழின் சிறப்பாகும். மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான பல்வேறு பருவங்களில் மிகவும் இனிய பருவமாய் எல்லோராலும் போற்றப்படுவது குழந்தைப்பருவம். எனவே, இறைவனையும், மனிதனையும் குழந்தையாகக் கற்பனை செய்து, பிள்ளைத்தமிழ் பாடி அதனால் கிடைக்கும் பொருளையும் புகழையும் பெற்று புலவர்கள் மகிழ்ச்சியடைந்தனர். அவற்றுள் இசுலாமிய பிள்ளைத்தமிழ் நூல்களில் நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் மற்றும் வள்ளல் சீதக்காதி பிள்ளைத்தமிழ் ஆகிய இரு நூல்களில் கற்பனைக்கு எட்டா பல வருணனைகள் உள்ளடங்கி உள்ளன. அவற்றை எவ்விதம் தம் படைப்பாளுமைத் திறனுடன் படைப்பாளர்கள் வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை ஆராயும் பொருட்டே இக்கட்டுரை அமைகிறது.

**பிள்ளைத்தமிழின் சிறப்பு**

பிள்ளைத்தமிழ் என்ற சிற்றிலக்கிய வகை தமிழில் மட்டுமே காணப்படும் இலக்கிய வகையாகும்' என்று மு.வரதராசனார் கூறியுள்ளார். மற்ற மொழிகளில் பிள்ளைத்தமிழுக்குரிய கூறுகள் விளங்குகின்றனவே அன்றித் தமிழ் மொழியிலுள்ளது போல் தனித்ததோர் இலக்கிய வகையாக உருப்பெற்றுத் திகழவில்லை. குழந்தையைப் பெற்ற தாயாரும் செவிலித்தாயாரும் தம் குழந்தையை இறைவன் காக்க வேண்டும் என்று பாடுவதும், தாலாட்டுப் பாடுவது, குழந்தை பேசும்படி ஊக்குவிப்பதும், கைகொட்டச் செய்வதும் குழந்தையை முத்தம் கொடுக்குமாறு வேண்டுவதும், தத்தித்தத்தி வரும் நடையைப் பார்த்து ரசிப்பதும், நிலவைக் காட்டி அழைப்பதும், மேலும் சிற்றில் சிதைத்தலும், கழங்கு வைத்து ஆடுவதும் சிறுதேர் உருட்டி விளையாடுவதும் அம்மானை ஆடுவதும் சிறுபறை ஒலித்தலும் ஊஞ்சல் ஆடுவதும் ஆகிய விளையாட்டுக்களைப் பார்த்து மகிழ்வதும் பிள்ளைத்தமிழ் இலக்கியம் காட்டக்கூடிய இனிய செய்திகளாகும்.

**பிள்ளைத்தமிழில் படைப்பாளுமை – விளக்கங்கள்**

புலவர்கள் தாம் வழிபடும் தெய்வத்தையோ, விரும்பும் அரசனையோ, ஆதரிக்கும் வள்ளலையோ, போற்றும் தலைவனையோ குழந்தையாக எண்ணி அக்குழந்தையின் மூன்றாம் மாதம் முதல் இருபத்தோராம் மாதம் வரையில் உள்ள மாதங்களைப் பத்து பருவங்களாக வகுத்துக் கொண்டு, ஒவ்வொரு பருவத்தையும் பத்துப்பத்து விருத்தப்பாடல்களால் பாடும் இலக்கியத்தைப் பிள்ளைத்தமிழ் என்பர். பிள்ளைத்தமிழைப் பிள்ளைப்பா, பிள்ளைப் பாட்டு,

பிள்ளைக்கவி என்றும் பெயர்களால் வழங்குவர். ‘குழவி மருங்கினும் கிழவதாகும்’ எனும் தொல்காப்பிய நூற்பாவே பிள்ளைத்தமிழ் முகிழ்க்கக் காரணம் எனலாம்.

பிள்ளைத்தமிழ் படைக்கும் படைப்பாளர்கள் தம் படைப்புகளில் புதுமையை விரும்பி தன் சிந்தனைக்கும், உணர்ச்சிகளுக்கும் ஏற்ப சிற்சில மாற்றங்களுடன் இலக்கண வரையறையைக் கடந்தும் தம் படைப்புகளை வெளியிடுகின்றனர். புதுமையை விரும்பும் மனித மனத்திற்கு ஏற்பப் படைப்பாளனும் தனது படைப்புகளில் புதுமையைப் புகுத்துகின்றான்.

தமிழ் இலக்கியப் படைப்புகளில் தோன்றி மறைவன பல உண்டு. அவற்றில் நிலைப்பெற்ற படைப்பை வழங்குபவரே ஆளுமைத்திறன் கொண்டவராகக் கருதப்படுபவர் ஆவார். தமிழ் இலக்கியங்களில் காணப்படும் செய்திகள் அனைத்தும் ஆளுமையின் வெளிப்பாடாகும். இதனால்தான் ஆளுமைத்திறன் அதாவது தனித்திறன் பெற்ற படைப்பாளர்களின் படைப்புகள் அனைத்திலும் மிஞ்சி நிற்கின்றன.

**இசுலாமிய பிள்ளைத்தமிழ் நூல்கள்**

இசுலாம் சமயத்தில் பிள்ளைத்தமிழ் இயற்றியவர்கள் சிலர் ‘அரபுத்தமிழ்’ என்னும் புதுவகைத் தமிழ் நடையினையே பின்பற்றினர். இசுலாமிய பிள்ளைத்தமிழ் நூல்களைப் பள்ளி இசுலாமிய இலக்கிய வரலாறு என்னும் நூல் கூறுகின்றது. அண்மையில் வெளிவந்த இசுலாமிய ஆய்வுக்கோவை சில பிள்ளைத்தமிழ் இலக்கியங்களைக் குறித்துள்ளது. இசுலாமியப் பிள்ளைத்தமிழ் நூல்களில் நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் மற்றும் வள்ளல் சீதக்காதி பிள்ளைத்தமிழ் என்ற இரு நூல்களில் வெளிப்படும் படைப்பாளுமைச் சிந்தனைகள் மட்டுமே அறிமுகப்படுத்தப்படுகின்றன.

**நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ்**

இப்பிள்ளைத்தமிழ் நூலை இயற்றியவர் நாஞ்சில் சா என்பவராவார். இந்நூல் 1977ஆம் ஆண்டு எழுதப்பெற்றது. இப்பிள்ளைதமிழ் நூல் நபிகள் நாயகத்தின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வகையில் எழுதப்பெற்றுள்ளது. நூல் முழுவதும் இடையிடையே இசுலாமிய சொற்கள் பயின்று வந்துள்ளன.

பாக்கீ, கய்யூம் - நிலையான இறைவன், தீன்தீன் - இசுலாமிய நெறி, தவ்வாபு - மன்னிக்கும் இறைவன், இலத்தீப் - பட்சமுள்ள இறைவன், இரவூப் கருணை இறைவன், கஃபார், அபூவ்வு (மன்னிக்கும் இறைவன்) போன்றோர் காப்புப் பருவத்தில் போற்றப்பெறுகின்றனர். மேலும் காப்புப் பருவத்தின் பாடல்கள் இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்களை நினைவு கூறும் வகையில் இயற்றப்பெற்றுள்ளன.

இரண்டாம் பாடல் :அலிப்புலவரின் மீஃராஜ் மாலையிலுள்ள முதலிரு சீர்கள்
மூன்றாம் பாடல் :பனி அஹமது மரைக்காயரின் சின்னச் சீறாவிலுள்ள ஒருசீர்
நான்காம் பாடல் :வண்ணக் களஞ்சியப் புலவரின் தீன் விளக்கத்திலுள்ள இருசீர்கள்
ஐந்தாம் பாடல் :சேகனாப் புலவரின் குத்புநாயகத்திலுள்ள ஒருசீர்
ஆறாம் பாடல் :உமறுப்புலவரின் முதுமொழி மாலையிலுள்ள ஒருவரி

ஏழாம் பாடல் :குணங்குடி மஸ்தான் சாகிபு பாடலிலுள்ள ஒருசீர்

எட்டாம் பாடல் :குலாம்காதிறு நாவலரின் நாகூர்ப் புராணத்திலுள்ள ஒருசீர்

ஒன்பதாம் பாடல் :பிச்சை இபுறாஹ{ம் புலவரின் பாடலிலுள்ள ஒருசீர்

பத்தாம் பாடல் :பீர்முஹம்மது அப்பாவின் ஞானப்பாலிலுள்ள முதல்மூன்று சீர்கள்[1]

போதனை சொல்லும் நிகழ்ச்சிகளை நாயகத்தின் வாழ்க்கையிலிருந்து ஆங்காங்கே பொருத்தமாக அமைத்திருப்பது, கவிஞரின் இலட்சிய நோக்கைப் புலப்படுத்துவது மட்டுமின்றி அவரின் படைப்பாளுமை திறனையும் வெளிப்படுத்துகிறது.

கோட்டமில் அன்பு கொட்டிய மலரே
கொட்டுக சப்பாணி
கொள்கையிற் சிறந்த கொற்றவன் நபியே[2]

என்று கவிஞர் மெய்மறந்து பாடும்போது, நாயகத்தின் மீதுள்ள காதலிலே அவர் மூழ்கி எழுகிறார் என்ற பிரமை நமக்கு ஏற்படுகின்றது. இந்த மெய்மறந்த நிலையிலும், இப்புவி வாழ்வுக்கு ஆக்கம் தரும் நபிகளின் நற்போதனைகளையும் எடுத்துக் கூறுகின்றார்.

வடிவிற் சிறந்த பேரழகும்
வன்மைக் கற்பும் வண்பண்பும்
வழங்கும் கொடையிற் கார்தோற்கும்
வயரிசைச் செல்வக் கலைப்பேறும்[3]

பெற்றுத் திகழ்ந்த கதீஜா நாச்சியாரின் வாழ்வில் விளக்கேற்றிய சீர்திருத்தச் செம்மலை ஆசிரியர் சிந்தைகுளிரப் போற்றும் இடம் சிறப்பு மிக்கதாகும்.

நபிமுஹம்மதுவுடம் அம்புலியை ஆட அழைக்கும் கவிஞர், கருணை மிக்க நபிபிரானின் கனிவுள்ளத்துக்கு ஒரு சான்று தருகின்றார்.

அறிவாலே உயர்ந்துவரும் மானுடர்கள்
அற்புதங்கள் அமைக்கின்ற ஆற்றல் பெற்றார்[4]

என்னும் பாடலடியில் மனிதர்கள் அறிவிலே சிறந்து விளங்கியவர்கள். அதனால் அமெரிக்கர்கள் வானத்திலே வலம் வந்து உன்மேல் காலடி வைத்து மிதித்துக் கல் எடுத்தார்கள். ஆனால் அறத்தின் நாயகம், அன்பின் உறைவிடம் என்ற சிறப்புகளுக்குரிய நபிகள் நாயகம் உன்னை மதிக்கமாட்டார். எனவே பயமின்றி விளையாட வருவாயாக என்று நாஞ்சில் நன்னிலத்துக் கவிஞர் அம்புலிக்கு உறுதிகூறும் புதுமையான சிந்தனையின் மூலம் அவரது படைப்பாளுமைத் திறன் நோக்கப்படுகிறது. மேலும் நீ நபிகளை நாடிவந்தால் உன் களங்கம் உன்னை விட்டு அகலும் என்று கூறி அழைக்கும் காட்சி கவிஞருடைய கற்பனை சிறந்து படைப்பாளுமைத் திறத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறு பாடலுக்குப் பாடல் பல்சுவையும் பெருகி இருக்கும் இப்பிள்ளைத்தமிழ் நூல் இசுலாமியப் பிள்ளைத்தமிழ் நூல்களுள் சிறந்த நூலாகப் போற்றப் பெறுகின்றது.

**வள்ளல் சீதக்காதி பிள்ளைத்தமிழ்**

இப்பிள்ளைத்தமிழ் நூலின் ஆசிரியர் S.M.A. காதர் ஆவார். வள்ளல் சீதக்காதியைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பெற்ற இந்நூல் 2000ஆம் ஆண்டு எழுதப்பெற்றது. இப்பிள்ளைத்தமிழ் நூல் சீதக்காதி அவர்களின் பின்னணியோடு அவர் கால வரலாற்றுச் செய்திகளையும் ஆங்காங்கே விவரித்துக் கூறுகின்றது. இசுலாம் மார்க்கத்து உயர் நல்லநெறிகள் ஆங்காங்கு மிளிர்வதை,

இறைவனும் ஒன்றே மனுக்குலம் ஒன்றே[5]

ஈதல் இஸ்லாம் சிதி[6]

தொழுகை ஒன்றே சமத்துவம்[7]

முள்ளனும் துயரை நீக்கிடும் தொழுகை[8]

என்னும் பாடலடிகள் மூலம் அறியலாம். புனித ‘ குர்ஆன்’ ‘ இறையருள் வேதம்’ , ‘குறைவிலா வேதம்’ , ‘நிறைவுறுவேதம்’ என்று ஆசிரியரால் சுட்டிக் கூறப்படுகின்றது.

‘தொன்னகர் கீழக்கரை’ என்று கீழக்கரையைப் புகழும் ஆசிரியர் வகுதை, காவிரி நாடு, கோணிக்கரை, அனுத்தொகை மங்கலம், நினைத்தது முடித்தான் பட்டினம், செய்யூர் போன்ற சிறப்பு வரலாற்றுப் பெயர்களையும், அருகில் உள்ள உத்திரகோசமங்கை, சிக்கல், திருப்புல்லணை பற்றியும் கூறுவது சிறப்புக்குரியது.

கீழக்கரைத் துறைமுகம், வணிகச்சிறப்பு, குதிரை வணிகம், முத்துக்குளித்தல், பவளக்கொடிகள் எடுத்தல், நவமணி வணிகம், குழந்தைகள் கிளிஞ்சல்களைச் சேகரித்தல் முதலியவற்றையும் குறிப்பிடுகின்றார். கீழக்கரை அரபிக்கூடம், அங்கு பயிற்றுவிக்கும் அதிராம்பட்டினம் ஆசான் பற்றிய செய்திகளும் இந்நூலில் பதிவு செய்யப்பெற்றுள்ளன. தொட்டில், சிறுதேர் அமைப்புப் பற்றிய வருணனைகள் ஆசிரியரின் கற்பனை வளத்தைக் காட்டுகிறது. பூக்கள், கனிகள், நவமணிகள், உயர்மரங்கள் போன்றவற்றைத் தாரளமாகப் பல இடங்களில் உவமையாகவும், உருவமாகவும் புலவர் தந்துள்ளது சிறப்புக்குரியது. கீழக்கரைக்குக் கொற்கை என்ற பெயரும் உண்டு. சிலர் வைகை சங்கமத் துறையில்தான் கொற்கை உள்ளது. எனவே இக்கூற்று கீழக்கரைக்கு எப்படிப் பொருந்தும் என்று வினவுவர். அதற்கு விடையாக,

கொற்கையும் தூர்ந்திடப் பாண்டிய மன்னர்
கொண்டநற் கொற்கைஇத் துறைமுகமே[9]

என்று கூறுவதன் மூலம் கவிஞரது ஆராய்ச்சித் திறனுடன் அவரது தனிப்பட்ட படைப்பாளுமைத் திறனும் வெளிப்படுகின்றது. வள்ளல் சீதக்காதியை ஆசிரியர் குறிப்பிடும் இடங்கள் அனைத்தும் மிகவும் நயமானவை. கூவாச் சிறுகுயில், தாவா மான்மறி, தூரிகை தீட்டாத ஓவியம் என்றெல்லாம் கூறுகின்றார்.

குழலினி தென்பர் யாழினி தென்பர்
குழவியின் மழலையும் கேளாதார்[10]

என்னும் பாடலடி திருக்குறளை நினைவூட்டுகின்றது. நிலவினை விளையாட அழைக்கும் இடத்து,

இராகென்னும் அரவின்வாய்ப் பட்டுமீளும்
எச்சில்நீ எழில்போர்வை போர்த்தியுள்ளாய்[11]

என்னும் அடியில் புராணக் கதையினையும் கூறுகின்றார்.

பறைகொட்டும் வழக்கம் இசுலாமியத்தில் இல்லை. ஆனால் முரசு ஒலிக்கும் மரபு இருப்பதை நோக்கி சிறுபறைப் பருவத்தைச் சிறுமுரசு கொட்டல் என்று மாற்றியமைத்துப்; பாடி இறைவனும் ஒன்றே, மறைகளும் ஒன்றே, வாழ்நெறி ஒன்றே, உறைவிடம் ஒன்றே, உலகமும் ஒன்றே என்று நல்ல நெறிகளையும் கூறி, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகளை நமக்கு நினைவூட்டி பொது சமய நோக்குடன் தனது படைப்பை வெளிப்படுத்தும் இவரது படைப்பாளுமைத் திறனை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது.

எளியநடையில் எதுகை, மோனை தவறாமல் பாடப்பெற்ற இந்நூல் இசுலாம் மார்க்கத்திற்கும், தமிழ் உலகத்திற்கும் பெருமை சேர்த்த நூலாகக் கருதப்படுகின்றது.

**முடிவுரை**

பிற சமய இலக்கியங்களைப் போன்று இசுலாமியத்தில் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றியிருப்பினும் அவை அனைத்தும் இன்று கிடைக்கவில்லை எனினும், நமக்குக் கிடைத்த சில நூல்களில் நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் மற்றும் வள்ளல் சீதக்காதி பிள்ளைத்தமிழ் ஆகிய இரு நூல்களில் நபிகளின் நற்போதனைகளை எடுத்துக்கூறிய விதம், புதுமையான கற்பனையில் அம்புலியை அழைத்தல், இசுலாம் மார்க்கத்து நெறிகளை ஆங்காங்கே வெளிப்படுத்தும் விதம், பொது சமய நோக்குடன் கவிதைப் படைத்தல் என படைப்பாளர்கள் தம் சிறந்த படைப்பினை வெளிப்படுத்தி, "கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது" என்ற ஆன்றோர் வாக்கினை மெய்ப்பித்து இருக்கின்றனர். பிற சமய இலக்கியங்களைப் போன்று இசுலாமியப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்களும் மக்களால் பயிலப்பட்டு அவற்றின் சிறப்பை உலகறியச் செய்ய வேண்டும்.

**அடிக்குறிப்புகள்**

1. நாஞ்சில் சா, நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ், ப.1
2. மேலது, ப.30
3. மேலது, ப.40
4. மேலது, ப.60
5. ஞ.ஆ.யு. காதர், வள்ளல் சீதக்காதி பிள்ளைத்தமிழ், ப.38
6. மேலது, ப.38
7. மேலது, ப.26

8. மேலது, ப.36

9. மேலது, ப.18

10. மேலது, ப.10

11. மேலது, ப.29

**துணை நூற்பட்டியல்**

1.நாஞ்சில் சா ,நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ், மில்லத் பிரிண்ட்டர்ஸ், சென்னை – 1.பதிப்பு - 1977.

2.S.M.A. காதர், வள்ளல் சீதக்காதி பிள்ளைத்தமிழ், சர்மிளா பதிப்பகம், 21, ஈசாபள்ளிவாசல் தெரு, இராமநாதபுரம் - 1. பதிப்பு – 2000.

**References:**

1. Nanjil Sa., Nabi Nayagam Pillaitamil, Millath Printers, Chennai – 1. Edition – 1977.
2. S.M.A. Kadar, Vallal Seethakkathi Pillaitamil, Sharmila Publications, 21, Esa Pallivasal Street, Ramanathapuram – 1. Edition – 2000.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.